## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.792/2019
Sessions)

( Prosecution P.W.7
Deposition of witness for (Defence
(Court

| Name | சுகன்யா தேவி | -- | |
|---|---|---|---|
| Father's Name | ராஜாராம் | Calling | மருத்துவர் |
| Village | திருமங்கலம் | Religion | இந்து |
| Taluk | திருமங்கலம் | Age | 36 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 11th day of August 2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது மதுரை அரவிந்த கண் மருத்துவமனையில் முதுநிலை மேற்படிப்பு பயின்று வருகிறேன். நான் இதற்கு முன்பு திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த கடந்த 28.06.2019 ம் தேதி பகல் 12.30 மணிக்கு நான் பணியிலிருந்தபோது திருவில்லிபுத்தூர் நகர் வட்ட காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் மணிகண்டன் என்ற முதுநிலை காவலர் மூலம் கொடுத்த அனுப்பியிருந்த வேண்டுகோள் கடிதத்தின் படி அவர் என்னிடம் அடையாளம் காட்டி ஆஜர்படுத்திய குற்ற எண்.90/2019 வழக்கில் இறந்துபோன கோவிந்தன் என்பவரது பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்டேன். பிரேதத்தின் கைகளில் மட்டும் விறைப்பு தன்மை காணப்பட்டது. பிரேத பரிசோதனைக்கு முன்பாக மேற்படி பிரேதத்தின் இடது கால் தொடை பகுதியில் 15 செ.மீ அளவிலான தையல் இடப்பட்ட காயம் காணப்பட்டது. அதனை பிரித்து பார்த்தபோது சதை பகுதிகள் கன்றிய நிலையில் காணப்பட்டது. Dynamic hip Screw பொருத்தப்பட்டிருந்தது. அவரது தலையின் மண்டை ஓட்டை பிரித்து பார்த்தபோது மூளை மற்றும் அதனை சுற்றியுள்ள மேற்பகுதிகள் இயல்பான நிலையில் காணப்பட்டது. அவரது மார்பு பகுதியை நுரையீரல் மற்றும் இருதயம் வெளிறி காணப்பட்டது. நுரையீரலுக்கு செல்லக்கூடிய முக்கியமான நரம்பில் ரத்த கட்டு காணப்பட்டது. அவரது வயிற்று பகுதியினுள் பகுதி செரிமானம் ஆன உணவு காணப்பட்டது. கல்லீரல், கணையம் மற்றும் மண்ணீரல் ஆகியவை வெளிறிய நிலையில் காணப்பட்டது. முதுகுதண்டு இயல்பான நிலையில் காணப்பட்டது. எனவே இறந்துபோன மேற்படி நபர் அவருக்கு ஏற்பட்டிருந்த நுரையீரலுக்கு செல்லக்கூடிய ரத்தகுழாயில் அடைப்பு ஏற்பட்டிருந்த காரணத்தினால் பிரேத பரிசோதனைக்கு 8 மணி நேரத்திற்கு முன்பாக இறந்திருக்கக்கூடும் என்று நான் சான்று வழங்கினேன்.

அவருக்கு நான் வழங்கிய **பிரேத பரிசோதனை சான்று அதசாஆ 4** ஆகும். மேற்படி பிரேதத்திற்கு இடுப்பு எலும்பு உடைந்து அதிலிருந்து ரத்தம் ரத்தக்குழாய் உறைந்து அதன் மூலம் நுரையீரலுக்கு சென்ற காரணத்தினால் மேற்படி இறப்பு ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை இல்லை.
மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 11th day of August 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**